Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | CC.No. 14/2023 | | |
| Witness for Complainant | PW1- Chief and Cross | | |
| Name | சுரேஷ்குமார் | Taluk : | ஊத்தங்கரை |
| Father's / Husband Name | | Calling : | |
| Village | | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 25.03.2026.

துவக்க நேரம்- 3.15 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் புதுக்காடு கிராமத்தில் குடியிருந்து ஓட்டுனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எதிரிகளும் நாங்களும் தற்போது சமாதானமாகி விட்டோம். அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் வேண்டாம். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சமாதான மனு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுடகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் விசாரணையிலும் மேற்கண்டவாறுதான் கூறினேன்.

**சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கோரப்பட்டு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் , குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 08.09.2022 தேதி இரவு 10 மணியளவில் குமாரின் வீட்டின் அருகே சென்று குமார் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை நான் கேட்டேன் அதற்கு குமார், அவர் அண்ணன் அம்மாசி ஆகியோர் கெட்ட

வார்த்தையால் திட்டி குமார் ரீப்பர் கட்டை எடுத்து எனது தலையில் ரத்த காயத்தை ஏற்படுத்தினார் என்னும், அம்மாசி கையால் எனது தோள் பட்டையின் மீது அடித்தார் என்றும் சத்தம் கேட்டு வந்த எனது மாமா ஆறுமுகம், அத்தை செல்வியையும் குமார் கட்டையால் அடித்து ரத்த காயம் ஏற்படுத்திவிட்டார் என்றும், எனக்கு சொந்தமான TN 29 AR 9376 பிக்அப் வாகனத்தை எதிரிகள் முன்பக்க கண்ணாடியை கட்டையால் உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும் அதன் மதிப்பு சுமார் 3000 ரூபாய் இருக்கும் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை.

முடிவு நேரம்– 3.30 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.